சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **1 / 2019**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **17.10.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பொன்னம்பலம் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1)முதல் தகவல் அறிக்கை கணிணி நகல் - ம.சா.ஆ-1

2) Scan film – ம.சா.ஆ.2

3) X-Ray – ம.சா.ஆ-3

2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவ சமயத்தில் இருசக்கர வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து பயணிந்தேன். நான் சென்ற இருசக்கர வாகன ஓட்டியை வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மேற்படி வழக்கானது குறைபாடு உடையது என்றால் சரியல்ல. அவ்விதத்தில் இம்மனுவான தள்ளுபடி செய்யத்தக்கது. நான் பயணித்த இருசக்கர வாகன ஓட்டியின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயணித்த இருசக்கர வாகன ஓட்டி வண்டியை சரியான முறையில் ஓட்டாத காரணத்தில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு பின்னர் குளித்தலை அரசு மருத்துவமனையிலும் திருச்சி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்து நல்ல முறையில் சிகிச்சை பெற்ற பின்னிட்டு தான் விடுவிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டது என்றாலும் அவை சரியாகிவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு காயம் ஏற்பட்டதால் ஏதாவது இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக முதல் எதிர்மனுதாரர் மீது போலீசார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. போலீசார் தயாரித்த வரைபடத்தில் சம்பவம் ரோட்டின் மையப்பகுதியில் நடைபெற்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. மேற்படி எனக்கு விபத்தினால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் அவர் வாகனத்தை சரிவர ஓட்டாத காரணத்தினாலும் அவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அவரிடம் தான் இழப்பீடு கோர வேண்டும் என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ. முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.